Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 18.9.2026/Script.

# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்—மலர்விழி
தேதி 18.9.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, 20-ஆவது ரோஜ்கார் விழாவில், பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் பேருக்கு, நியமனக் கடிதங்களை வழங்குகிறார்.

புதுடெல்லியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை இயக்கவியலின் எதிர்காலம் குறித்த, சர்வதேச மாநாட்டை, நாளை காலை பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

இந்தியாவில், கலாச்சார மேன்மை, மற்றும் கற்பனை வளம் காரணமாகவே, படைப்புத் திறன்சார் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருவதாக, மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

இஎஸ்ஐ திட்டப் பயனாளிகளுக்கு, பணமற்ற முறையில் மருத்துவ சேவை வழங்க, ஜிப்மர் நிர்வாகத்திற்கும், இஎஸ்ஐ கழகத்திற்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

## மோடி ரோஜ்கார்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, காணொலி காட்சி மூலமான 20-ஆவது ரோஜ்கார் விழாவில், பல்வேறு அரசு துறைகள் மற்றும்

அமைப்புகளில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் இளைஞர்களுக்கு, நியமனக் கடிதங்களை வழங்கி உரையாற்ற இருக்கிறார். இந்த ரோஜ்கார் மேளா நாட்டில் 45 இடங்களில் நடைபெற உள்ளது. பாதுகாப்பு, ரயில்வே, நிதி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், நியமனக் கடிதங்களை பெற உள்ளனர். இதையும் சேர்த்து ரோஜ்கார் மேளாக்கள் மூலம் நியமனக் கடிதம் பெற்றவர்களின் எண்ணிக்கை, 12 லட்சத்து 75 ஆயிரமாக அதிகரிப்பதும், நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் இளைஞர் பங்கேற்பை வலுப்படுத்துவதில் அரசு காட்டி வரும் அக்கறையின் பிரதிபலிப்பாக, ரோஜ்கார் மேளாக்கள் அமைவதும் குறிப்பிடத் தக்கது.

## மோடி சுற்றுச்சூழல்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளைக் காலை புதுடெல்லியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை இயக்கவியலின் எதிர்காலம் குறித்த, சர்வதேச மாநாட்டை தொடக்கி வைக்கிறார். தேசிய பசுமைத் தீர்ப்பாயம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்த 2 நாள் மாநாட்டில், 17 நாடுகளில் இருந்து, சுற்றுச்சூழல் நிபுணர்கள், உயர்நிலை நீதிபதிகள், மற்றும், சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள், பங்கேற்க உள்ளனர். மாநில சட்டசேவை ஆணையங்கள், சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையங்கள், மற்றும், சதுப்புநில ஆணையங்களின்

பிரதிநிதிகளும், மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். முக்கியமான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை பிரச்சனைகள் குறித்தும், அறிவியல், சட்டம், நிர்வாகம், மற்றும் அமைப்பு ரீதியிலான அனுபவங்களின் அடிப்படையில், இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான அணுகுமுறைகள் குறித்தும், மாநாட்டில் விவாதிக்கப்படும்.

## சேவா சங்கல்ப்

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து நீடிக்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான ஜல்ஜீவன்

இயக்கத்தினால், கிராமப்புற வீடுகளுக்கு, குழாய் மூலமான குடிநீர் இணைப்பு கிடைத்திருப்பது குறித்துக் காண்போம்............

(வாய்ஸ்)

குழாய் மூலமான குடிநீர் இணைப்பு என்பது, அனைத்து வீடுகளின் அடிப்படைத் தேவையே தவிர, நகர்புற வசதி மட்டுமே அல்ல என்பதைக் கருத்தில் கொண்டு, 2019-ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ், கடந்த ஜூன் மாதம் வரை, 12.6 கோடி கிராமப்புற வீடுகளுக்கு, குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2019-ஆம் ஆண்டில், 3.23 கோடி கிராமப்புற வீடுகள் மட்டுமே குழாய் மூலமான குடிநீர் வசதி பெற்றிருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை, சுமார் 16 கோடியாக அதிகரித்துள்ளது. இதன் மூலம் நாட்டின் 82 சதவிகித கிராமப்புற வீடுகள், குழாய் மூலமான குடிநீர் வசதியுடன் கூடிய வீடுகளாக மேம்பட்டுள்ளன. 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள், இதில் 100 சதவிகித இலக்கை ஏற்கனவே எட்டி உள்ளன.

ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ், குடிநீர் விநியோகத்திற்கான குழாய்க் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அப்பாற்பட்டு, நீர்வள சேமிப்பு, மழை நீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் மட்டத்தின் உயர்வு மற்றும் கழிவுநீர் மேலாண்மை

பணிகளுக்கும், முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் அடிப்படை வசதிகளை பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பு, சமூகத்திடமே விடப்படுவதால், மக்கள் பங்கேற்பும் வலுப்பெறுகிறது. இத்தகைய பணிகள் தொடர்பாக, கிராமங்கள் தோறும், 5 லட்சம் நீர்வளக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், குறைந்த பட்சம் 50 சதவிகித அளவிற்கு பெண் உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். மொத்தம் 24.8 லட்சம் பெண்களுக்கு, குடிநீர் தரப் பரிசோதனையில் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

ஜல்ஜீவன் இயக்கத்தினால், குடிநீர் எடுத்து வருவதற்காக வெளியே செல்லும் கட்டாயத்தில் இருந்து, சுமார் 9 கோடி பெண்கள் விடுவிக்கப் பட்டுள்ளனர். இதனால், தினசரி மொத்தம் ஐந்தரை கோடி மணி அளவிற்கு, பயனாளிக் குடும்பங்களின் நேரம் சேமிக்கப்படுவதாகவும், வேளாண்மை மற்றும் தொடர்புடைய பணிகளில், பெண்கள் பங்கேற்கும் நேரம், சுமார் 7.4 சதவிகித அளவிற்கு அதிகரித்து இருப்பதாகவும், உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது. கிராமப்புற குடும்பங்களின் அன்றாட பிரச்சனையாகவே இருந்த குடிநீரை, சுகாதாரம், கண்ணியம், மற்றும், புதிய வாய்ப்புகளுக்கான அடித் தளமாக மாற்றி உள்ள ஜல்ஜீவன் இயக்கம், தற்போது, 2028-ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

## ர்க்கரை

சர்க்கரை ஆலைகளின் உற்பத்திச் செலவு, 25 சதவிகிதம் குறைந்து இருப்பதன் முழுமையான பலன்களை, வியாபாரிகள் நுகர்வோருக்கு வழங்க வேண்டுமென, மத்திய அரசு கூறி உள்ளது. இந்திய சர்க்கரை உற்பத்தியாளர் சங்கத்துடன், இன்று மத்திய உணவுத் துறைச் செயலர் நடத்திய கூட்டத்தில், இவ்வாறு வலியுறுத்தப்பட்டது. சர்க்கரைத் தேவை அதிகம் உள்ள மொத்த நுகர்வோர், 30 நாள் தேவைக்கான சர்க்கரையை கையிருப்பில் வைத்துக் கொள்ளலாம் என்றாலும், 15 நாட்களுக்கு மேற்பட்ட தேவைகளை, முன் கூட்டிய அனுமதியுடன் இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையில் இருந்தே, வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்றும், மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.

## எல் முருகன்

இந்தியாவில், கற்பனை வளம், கலாச்சார மேன்மை, மற்றும், புதுமையாக்க முயற்சிகள் காரணமாகவே, படைப்புத் திறன்சார் பொருளாதாரம், வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். படைப்பு திறன்சார் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஏற்ற சட்டங்கள்

மற்றும் கொள்கைகள் என்பது குறித்து, ஹரியானா மாநிலம் சோனிப்பட்டில், ஓபி ஜிண்டால் உலக பல்கலைக் கழகத்தில், இன்று நடைபெற்ற மாநாட்டில் அவர் உரையாற்றினார். அமைச்சரின் உரை குறித்து, கூடுதல் விவரங்கள்............

(வாய்ஸ்)

திரைப்படம், அனிமேஷன், கேமிங், விளம்பரம், நூல் பதிப்பு, டிஜிட்டல் உள்ளடக்கம் போன்ற படைப்புத் திறன்சார் துறைகளில், தற்போது, 5.7 கோடி இந்தியர்கள் ஈடுபட்டுள்ளதாகவும், இத்துறைகளின் வளர்ச்சியினால் இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவு வாய்ப்புகள் உருவாகி வருவதாகவும் மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்தார். இத் துறைகளுக்குத் தேவையான மனித வளத்தை போதிய அளவில் உருவாக்கவே, மத்திய அரசு, இந்திய படைப்புத் திறன்சார் தொழில் நுட்ப பல்கலைக்கழகத்திற்கும், பள்ளி-கல்லூரிகளில் படைப்பாற்றல் ஆய்வுக் கூடங்களை உருவாக்கும் பணிகளுக்கும், நிதி ஆதரவு அறிவித்து இருப்பதாக அவர் கூறினார். படைப்பாளிகளுக்கு நியாயமான ஊதியம், காப்புரிமைப் பாதுகாப்பு கிடைப்பதையும், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் பொறுப்பான பயன்பாட்டையும் உறுதிப்படுத்த, உரிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் தேவையென, டாக்டர் எல் முருகன் மேலும் வலியுறுத்தினார்.

## ஜிப்மர்

புதுச்சேரி ஜிப்மரில், இஎஸ்ஐ திட்டப் பயனாளிகளுக்கு, பணமற்ற முறையில் மருத்துவ சேவை வழங்குவது தொடர்பாக, இஎஸ்ஐ கழகத்திற்கும், ஜிப்மர் நிர்வாகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி முன்னிலையில் இஎஸ்ஐ கழகத்தின் புதுச்சேரி மண்டல அலுவலகத்தைச் சேர்ந்த, மாநில மருத்துவ அதிகாரி டாக்டர் சுப்பிரமணியன், ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் சகா வினோத் குமார் ஆகியோர் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

## காரைக்கால் முகாம்

காரைக்கால் திருப்பட்டிணம் அரசு ஆண்கள் தொழிற் பயிற்சி நிலையத்தில், பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் முகாம், வரும் 23-ஆம் தேதி புதன் கிழமை நடைபெற உள்ளது. பல்வேறு அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இம்முகாமின் போது, தொழில் பழகுநர் பயிற்சிக்கு, ஆள் தெரிவு செய்ய உள்ளனர். 5 முதல் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், ஐடிஐ, டிப்ளமா, அல்லது, பட்டபடிப்பு முடித்தவர்கள், உரிய சான்றிதழ்கள் மற்றும் ஆதார் அட்டையுடன், இதில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. தொழில் பழகுநர் பயிற்சிக்கு தேர்வாகும் நபர்களுக்கு, மாதம் 6 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை, உதவித் தொகை வழங்கப்படும்.

## காரைக்கால் குறை கேட்பு

காரைக்காலில், காவல் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, மக்கள் மன்றம், குறை கேட்பு நிகழ்ச்சி நாளை நடைபெற உள்ளது. நெடுங்காடு காவல் நிலையம் மற்றும் திருப்பட்டிணம் காவல் நிலையத்தில், உயர்நிலை காவல் துறை அதிகாரிகள், பொது மக்களின் குறைகளைக் கேட்டறிய உள்ளனர். காரைக்கால் மக்கள், இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என, காவல் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

## புதுச்சேரி-புரட்டாசி

இன்று புரட்டாசி மாதம் பிறந்திருப்பதை ஒட்டி, புதுச்சேரியில் இருந்து திருப்பதிக்கு பாத யாத்திரை செல்லும் பக்தர்கள், மாலை அணிந்து விரதம் தொடக்கினர். பாரதி பூங்கா பகுதியில் உள்ள பெருமாள் கோவிலில், வெங்கடேசப் பெருமாள் பக்த ஜன சபா சார்பில், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

## வானிலை

வளிமண்டல சுழற்சி உள்ளிட்ட காரணங்களால், இன்று, கோவை, நீலகிரி,  தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு

வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஒருசில இடங்கள், புதுச்சேரியில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 24-ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள வங்க கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என, அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக, திருச்சி மாவட்டம் புள்ளம்பாடியில், 8 செண்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## ஆசிய விளையாட்டு

ஆசிய விளையாட்டு போட்டிகளின் மகளிர் 20 ஓவர் கிரிக்கெட் பிரிவில், ஜப்பானின் நிஷின் நகரில் இன்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில், ஜப்பானிய அணியால் நிர்ணயிக்கப்பட்ட 57 ரன் என்னும் வெற்றி இலக்கை 5-ஆவது ஓவரிலேயே எட்டி, இந்தியா வெற்றி பெற்றது. அடுத்த கட்டமாக இந்திய மகளிர் அணியினர், வரும் ஞாயிற்றுக்கிழமை அரையிறுதிப் போட்டியில், பங்களாதேஷ் அணியுடன் மோத உள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, 20-ஆவது ரோஜ்கார் விழாவில், பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் பேருக்கு, நியமனக் கடிதங்களை வழங்குகிறார்.

புதுடெல்லியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை இயக்கவியலின் எதிர்காலம் குறித்த, சர்வதேச மாநாட்டை, நாளை காலை பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

இந்தியாவில், கலாச்சார மேன்மை, மற்றும் கற்பனை வளம் காரணமாகவே, படைப்புத் திறன்சார் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருவதாக, மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

இஎஸ்ஐ திட்டப் பயனாளிகளுக்கு, பணமற்ற முறையில் மருத்துவ சேவை வழங்க, ஜிப்மர் நிர்வாகத்திற்கும், இஎஸ்ஐ கழகத்திற்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------------